# தொல்காப்பிய நோக்கில் தலைமகளிரின் பண்பாடு

23

**முனைவர் க.மகேஸ்வரி**
**உதவிப்பேராசிரியர், மேலாண்மையியல் புலம்,**
**SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர்.**
**maheswak@srmist.edu.in**

**ஆய்வுச்சுருக்கம்**

தொல்காப்பியம் தமிழ் மொழியின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் வாழ்வியல் சிறப்புகளையும் விளக்கும் பழம்பெரும் நூல் ஆகும். பொருளதிகாரம் பழந்தமிழரின் அகப்புற வாழ்க்கை முறைகளை விவரிக்கிறது. அவற்றுள் அகமாந்தர்களில் தலைவியை மிகவும் சிறப்புற போற்றுகின்றது. பழந்தமிழ்ப் பண்பாட்டைப் பளிங்கென எடுத்துக்காட்டும் தொல்காப்பியத்தைத் தமிழ் மக்கள் இன்னும் தெளிந்து தெளிவடையவில்லை. அகஒழுக்கம் புறஒழுக்கம் என்னும் இருவகை ஒழுக்க நெறிகளுள் அகஒழுக்கம் வாழ்க்கையை உண்டாக்குவது. புறஒழுக்கம் இவ்வாறு உண்டாக்கப் பெற்ற அகஒழுக்கத்திற்கு அறனாக நிற்பது ஆகும். உலகுயிர்த் தோற்றத்திற்கே அகவொழுக்கம் அடித்தளமாக அமைவதினால் எல்லாப் பொருளிலும் அவ்வகஒழுக்கமே சிறந்ததாக அமைகின்றது என்னும் அடிப்படையில் தலைவியின் மாண்புகளைத் தொல்காப்பிய நோக்கில் இவ்வாய்வு அணுகப்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** கற்பு, நிறை, ஒழுக்கம், விருந்தோம்பல், தன்னடக்கம், பண்பாடு,

**முன்னுரை**

குடும்ப ஒற்றுமைக்கு அச்சாணியாகத் திகழ்பவள் பெண். பெண்களுடைய நலன் போற்றிப் பாதுகாக்கப்படாத இடத்தில் வேறு எந்த நலனும் நிகழ்வது அரிதாகும். ஒரு நாட்டின் நலன் அந்நாட்டுப் பெண்களின் நிலையைப் பொறுத்தே அமையும். அடக்கம், ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும் என்று அறிஞர் கூறுவர். அப்பெண்ணின் இயல்பையும் அவளின் பண்பையும் எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மகளிரின் இயல்புகள்**

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப.** தொல்.பொருள் 96)

பொருந்தாவற்றைக் காணும்போதும் உணரும்போதும் தோன்றுகின்ற மருட்சியை அச்சம் என்றும் இயல்பாகவே பெண்களுக்குரிய வெட்கத்தை நாணம் என்றும் அடக்கமாய் இருத்தலை மடம் என்றும் கூறுவர். இம்மூன்று குணங்களும் மகளிர்க்கு முன்னிருத்த வேண்டிய இயல்புகள் என்கிறார் தொல்காப்பியர்.

இதற்கு இளம்பூரணர் வேட்கையுற்றுழியும் அச்சத்தானாதல் நாணானாதல் புணர்ச்சிக்கு இசையாது நின்று வரைந்து எய்தல் வேண்டுமென்பது போந்து என்பர்,

**உயிரும் நாணும் மடனும் என்றிவை**
**செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய** (தொல்.பொருள் – 198)

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். நாணம் என்பதற்கு கௌரா தமிழ் அகராதி அச்சம், அடக்கம், மதிப்பு, வெட்கம், பயபக்தி, மானம், தணிகை என பொருள் கூறுகிறது. மேலும்,

**நாணின்றி அமையாது பெண்மை** (பழ.நா – 327)

இல்வாழ்க்கையில் ஈடுபடும் பெண்களுக்கு நாணம் வேண்டும் என்று பழமொழி நானூறு குறிப்பிடுகிறது.

**பெண்மை நலத்துக்கு அணியென்ப நாணம்** (நான் – 11)

பெண்ணிற்கு முதன்மையானது நாணம் எனவும் அந்த நாணத்தையே தலைவன் விரும்புவான் எனவும் நான்மணிக்கடிகை மூலம் அறியமுடிகிறது. தலைவனால் விரும்பப்படும் பெண்ணிற்கு அழகு நாணம் என்பதை திரிகடுகம்

**பெண்ணுக் கணிகலம் நாணுடைமை** (திரி – 52:11)

எனக் குறிப்பிடுகிறது. **நாண் என்பது பெண்டிர்க்கு இயல்பாக உள்ளதொரு தன்மை, மடம் என்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை, அச்சம் என்பது பெண்மையில் தான் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது. பயிர்ப்பு என்பது பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை.1**

என நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்பவற்றை தலைவியின் குணங்களாகக் களவியல் உரையாசிரியர் கூறுவார்.

**நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா** (நள. வெண் – 39) என்ற வெண்பா புகழேந்திப் புலவரின் நளவெண்பா அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய நாற்குணங்களையும் தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை, காலாற்படை என நாற்படையாகவும் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றை நல்ல அமைச்சரவையாகவும் ஒலிக்கும் காற்சிலம்பை அணிமுரசாகவும் வெட்டும் கண்ணை வேற்படை, வாட்படையாகவும் அழகிய முகத்தை வெண்கொற்றக் குடையாகவும் கொண்டு பெண் ஓர் அரசை அமைத்து ஒவ்வொரு வீட்டிலும் ஆளுவதாக ஆசிரியர் கற்பனை நயம்பட கூறுகிறார்.

இன்று ஒரு பெண்ணின் மேனியை ஓர் அந்நிய ஆடவன் தொட்டாலோ தீண்டினாலோ அவளுக்கு அவன்மேல் ஓர் அருவருப்பு, வெறுப்பு, சீற்றம் உண்டாகும் இதனை பயிர்ப்பு என்கிறோம்.

தொல்காப்பியர் காலத்தில் பயிர்ப்பு என்ற சொல் வழக்கில் இல்லை. அப்பெண்களுக்கு ‘பயிர்ப்பு’ என்ற குணம் ஏற்பட வாய்ப்பும் அமையவில்லை. எனவே தொல்காப்பியர் காலத்தில் பயிர்ப்பு நீங்கலாக முக்குணங்களுடன் வாழ்ந்த பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம் என்ற குணங்களுக்கு மட்டுமே தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளதை அறியமுடிகிறது.

**உயர்குடிப் பெண்டிர் கொண்டிருந்த கற்புக் குணங்களுள், நாணமும் பயிர்ப்பும் பண்பாட்டுக் குணங்களாகும்2** என்று தேவநேயப் பாவாணர் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது. பெண்ணின் பெருமையை பேசவல்ல இந்த முக்குணங்களும் நாற்குணங்களும் பெண்களுக்கு அமைந்து அவளுடைய எண்ணங்கள், செயல்படும், நடத்தைகள், பிறருடன் பழகும் முறை போன்றவற்றால் தனித்தன்மை வாய்ந்த ஆளுமைப் பண்புடையவளாகத் தொல்காப்பியம் உணர்த்துகிறது. மேலும்,

**செறிவும் நிறையும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான** (தொல்.பொருள்- 206)

எனப் பிற இயல்புகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்நூற்பாவிற்கு பின்வருமாறு உரை கூறியுள்ளார் ச. பாலசுந்தரம் **அச்சம், மடம், நாண் முதலிய பெண்மைக் குணமுடைய மகளிர் அகனைந்திணைக்கண் இங்ஙனம் அறிவாராய்ச்சியுடையராய்த் திகழ்தலும் குறிப்பறிந்து ஒழுகலும், வினாவும் செப்பும் நிகழ்தலும் எவ்வாறு? என்னும் ஐயத்தைக் களையுமுகத்தான் பெண்டிர்க்குரிய இயல்பு ஆமாறு கூறுகின்றது3** எனக் கருத்துரைத்து

**நிலையிற்றிரியாத அடக்கமும் மறைபுலப்படாவாறு ஒழுகும் நிறையும் மனக்கோட்ட மின்மையும் காலமும் இடமும் அறிந்து கூறத்தகுவன கூறலும் நன்மை தீமைகளை ஆராய்ந்து கொள்ளும் அறிவும் தம் உள்ளத்தினைப் பிறர் எளிதின் அறியவொண்ணா தொழுகும் அருமையும் பெண்பாலர்க்குரிய திறன்களாகும்4** என்று பொருள் கூறியுள்ளார்.

இவ்வாறு அச்சமும் நாணும் மடனும் அறிவும் பெண்ணின் குண இயல்புகளாக இலக்கண நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் குறிப்பிடுகின்றனர். இச்சிறப்புடைய குணங்கள் பெண்களுக்கே உரிந்ததாக இருப்பதால்தான் நன்மை தீமைகளை ஆராய்ந்து அவற்றிற்கேற்ப செயல்படும் அறிவாற்றலும் நற்குணங்களும் நிறைந்த பண்புடையவர்களாக தொல்காப்பியம் காட்டுகின்றது.

**தலைவியின் மாண்புகள்**

**கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்** (தொல்.பொருள் – 150)

என்ற நூற்பாவில் கற்பு, காமம், நல்லொழுக்கம், மென்மை, பொறுமை, விருந்து வரவேற்றுப் பேணுதல், சுற்றத்தினரை ஓம்புதல் மற்றும் இவை தவிர பிறவும் திருமணமான பெண்ணுக்கு உரிய பண்புகளாகச் சொல்லப்படுகின்றன.

பிற பண்புகள் என்பதற்கு நச்சினார்க்கினியர் சமைத்தல், கணவனின் பிற மனைவியரிடம் அன்பு பாராட்டி அவர்களை மன மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுதல், கணவனின் காமக்கிழத்தியருக்கு நல்லது செய்து அவர்களால் மதிக்கப்படுபவளாக இருப்பது மனைவியின் பண்பாகும் என்றுரைக்கிறார்.

**தாய்போற் கழறீத் தழீஇக் கோடல்**
**ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப** (தொல்.பொருள்-171)

என்றும்

**அவன் சோர்வு காத்தல் கடனெனப் படுதலின்** (தொல்.பொருள்–172)

எனும் நூற்பாவில் தலைவன் தவறான வழியில் சென்று துயருற்று மீண்டு வரும்போது தாய்போல் இடித்துரைத்து அவனைக் காப்பது தலைவியின் கடமை என்றும் காமக்கிழத்தியை தன் மகனின் தாயாக ஏற்றுக் கொள்ளுதல் வேண்டுமெனவும் தொல்காப்பியம் எடுத்துரைக்கப்படுகின்றது.

மேலும் பரத்தமை ஒழுக்கத்தை மண்ணித்து,

**இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீயா கியர் எம் கணவனை**
**யான் ஆகியர்நின் நெஞ்சு நேர்பவளே.** (குறுந் – 49)

என்ற பாடலில் இப்பிறவி முடிந்த பின்னும் மறுபிறப்பிலும் நீதான் என் கணவனாக வேண்டும் என்று தலைவி கூறுகிறாள். இதனால் தலைவனிடம் கொண்ட அன்பு மறுபிறவியிலும் தொடர விரும்புகிறாள் என்பதையும் மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையும் பெண்களிடம் இருப்பதை அறியலாம். **முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்** (குறுந் – 167) இப்பாடலில் மனைவி கணவனுக்கு அன்போடு சமைத்து ஊட்டுகின்றாள். அவளது உணவில் சோறும் கறியும் மட்டுமின்றி அன்பும் தோய்கின்றது. அவ்வுணவை உண்ட தலைவன் இனிது இனிது என பாராட்டுகிறான். அதைக்கேட்ட தலைவி அகம் மகிழ்கிறாள். இதிலிருந்து தலைவியின் சிறந்த இல்லறப் பண்பை அறியலாம்.

**கற்பு**

மகளிர்க்குரிய பண்புகளுள் முதன்மையாக இடம்பெறுவது கற்பு நெறியாகும். தலைவி தன் கற்பைக் காக்க உறுதிபூண்டு பேசும் இடங்களை களவியல் நூற்பா எடுத்துரைக்கின்றது. காமக் கிழவோன் உள்வழிப்படுதல் தலைவிக்குரிய செயலாகக் கூறுவது நோக்கத்தக்கது.

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனத்**
**தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு** (தொல்.பொ – 111)

**காமக் கிழவன் உள்வழிப் படலாம். ஆகவே, அவன் இருக்குமிடம் நாடிச் செல்லலாம். இதற்கு இடம் உண்டு. ஏனெனில் உயிரைவிட நாணமும், கற்பும் சிறந்தது என்பது தமிழ் மரபு. அவள் தன் கற்பைக் குலைக்காது காத்துக்கொள்ளத் தன் தலைவனை நாடிச் சென்றாள். சென்றவள் தன் நாணத்தையும், கற்பையும் நிலைப்படுத்தி நின்றாள்.**5 என கா.விசயரத்தினம் குறிப்பிடுவதும் **நோக்கத்தக்கது.**

கற்புடைய மகளிர் பிறத் தெய்வங்களைத் தொழுதல் இல்லை. கணவனையேத் தெய்வமாக மதித்து ஒழுகினர். இதனைத் திருவள்ளுவர் எல்லாத் தெய்வமும் தன் கணவனே என்று கருதி அவனை நாள்தோறும் தொழுபவள் பெய் என்று சொன்னால் மழை பெய்யும் என்று கற்பின் மேன்மையைக் கூறுகிறார். மேலும்,

**கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி** (திரி – 96:1)

என்ற வரிகளில் கணவனின் குறிப்பறிந்து நடப்பவள் பெண்டாட்டி என்றும் அவள் பெய் என்று சொன்னால் மழை பெய்யும் என்றும் நல்லாதனார் கூறுகிறார் கண்ணகி சினந்துக் கூறியதால் மதுரை மாநகரம் தீ பற்றி எரிந்தது என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. கற்புடைய பெண்கள் கூறினால்

இயற்கையும் செவிமடுக்கும் என்பதோடு கற்பின் மேன்மையையும் அறியமுடிகின்றது.

**காமவெளிப்பாடு**

காதற்காம வெளிப்பாட்டிலும் மகளிர்க்கான வரையறைகள் வகுக்கப்பட்டிருப்பதை பின்வரும் நூற்பாவில் அறிந்துகொள்ளலாம்.

**காமத் திணையின் கண்நின்று வரூஉம்**
**நாணும் மடனும் பெண்மைய ஆகலின்** (தொல்.பொருள்-106)

என்றும்

**தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்தல்**
**எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை**
**பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்**
**பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப** (தொல்.பொருள் – 116)

என்ற நூற்பாவில் காதல் வயப்பட்ட தலைவனும் தலைவியும் தனித்திருந்த தருணத்தில் தலைவனின் ஆண்மையிலும் அழகிலும் எவ்வளவு தான் ஈடுபாடு இருந்தாலும் தலைவி தன் உணர்வுகளை வார்த்தைகளால் கூறாமல், புதுமண்கலத்தில் ஊற்றப்பட்ட நீரானது புறத்தே கசிவது போல தன் குறிப்பால் வெளிப்படுத்துபவள் என்பதை அறியலாம்.

இவ்வாறு அச்சம், மடம், நாணம் இவற்றால் சிறப்புற்று விளங்கும் பெண்ணானவள் தனித்திருக்கும் வேளையிலும் வரம்பு கடக்காமல் தன் புலன்களை அடக்கும் பண்பு கொண்ட அறிவுடையவள் என்பதை தொல்காப்பியம் நன்கு உணர்த்துகிறது..

**நிறை**

**நிறைவெனப் படுவது மறைபிற றறியாமை** (கலி – 133)

எனத் தனிமனித அறங்களை வரையறைச் செய்யும் கலித்தொகை குறிப்பிடுகிறது. சொல்லாலும் செயலாலும் மறைக்கப்பட வேண்டியவற்றை பிறர்க்குப் புலப்டுத்தாமல் காப்பதே நிறை என்பர். இவற்றுள் உடலும் உள்ளமும் அடங்கும்

மனைவி தன் கணவனையே உயிராகக் கொண்டு அவன் நலனே தன் நலன் என்று கருதி அவன் குடும்பம் வறுமை உற்ற நிலையில் நீரோடு கிடக்கும் எளிய கஞ்கியைப் பொழுது மாறி உண்ணும் வாழ்க்கையை அடைந்துவிட்டாள். ஒரு காலத்தில் பால்சோற்றைப் பொற் கிண்ணத்தில் இட்டு உண்க என செவிலித்தாய் பூங்கோல் கொண்டு ஓச்சவும் பந்தலில் ஓடி மறுப்பவள் தன் தந்தையின் பெருஞ்செல்வத்தை நினையாமல் இருக்கிறாள் என்பதை,

**ஒழுகுநீர் நுணங்கறன் போலப்**

**பொழுது மறுத்து உண்ணுஞ் சிறுமது கையளே** என்ற நற்றிணைப் பாடல் குறிப்பிடுகிறது. இவ்வாறு குடும்ப வறுமையைப் பெற்றோருக்கு மறைத்து வாழும் சிறந்த மனைவியின் பண்பை அறியலாம்.

**காதலன் உள்ளம் களிக்க, உடல் நல பெற அவனுக்குப் பணிவிடை புரிவதே கற்புள்ள பெண்ணின் கடமை. கணவன் செய்யும் குற்றங்களை எவரும் அறியும்படி எடுத்துச் சொல்லக்கூடாது. கணவன் செய்யும் இழி செயல்களை ஊரார் அறிந்தால் அவனைப் பற்றி இழிவாக எண்ணுவார்கள். ஏளனமாகப் பேசுவார்கள். ஆதலால் அவன் செய்யும் குற்றங்களை மறைப்பதே மனைவியின் கடமை. இவை போன்ற குணங்கள் பெண்களுக்கு வேண்டும் இவ்வாறு நடப்பதே கற்புடைமை.6**

என்று சாமி சிதம்பரனார் கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

**விருந்தோம்பல்**

தம்மை நாடி வரும் விருந்தினர்களை இன்முகத்தோடு வரவேற்று அன்போடும் ஆர்வத்தோடும் உண்டி முதலானவற்றை கொடுத்து உபசரிப்பது இல்வாழ்வார்க்குரிய சிறந்த பண்பாக தமிழகம் போற்றுகிறது. இதனைத்தான் தொல்காப்பியம் விருந்து புறந்தருதல் என்று மகளிர்க்குரிய மாண்புகளுள் ஒன்றாகக் கூறுகின்றது.

கற்பு வழிப்பட்ட தலைவனும் தலைவியும் இணைந்திருக்கும் காலத்தில் தான் விருந்தினரை வரவேற்றுப் பேணுதல் வேண்டும் என்ற தமிழ் மரபின் சிறப்பினை சிலப்பதிகாரம் பின்வருமாறு இயம்புகிறது.

**அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்த்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்ன (சிலம்பு.1**

அறநெறியாளர்களுக்கு உணவளித்தல், அந்தணர்களைப் பேணி காத்தல், துறவியரை எதிர்கொண்டு வரவேற்றல், விருந்தினரை உபசரித்தல் போன்ற இல்லறப் பண்புகளைத் தன் கணவனை பிரிந்து விட்டதால் இழந்துவிட்டதாகக் கண்ணகி கூறுகிறாள்.

**அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும் (நற் 142**) என்ற நற்றிணைப் பாடலில் நள்ளிரவு ஆயினும் வீட்டிற்கு வந்த விருந்தினர்களுக்கு மீதம் இருந்த உணவை பரிமாறாமல் நெய்யைவிட்டு மாமிசம் சமைத்து விருத்தினர்களின் மனம் மகிழும்படி உணவு படைக்கிறாள் தலைவி. இதனை, இரவில் விருந்தினர்கள் வந்தாலும் மகிழ்ச்சி பொருந்திய உள்ளத்தோடு உறவினர்களை வரவேற்கும் தன்மையுடையவள் என்றும் மெல்லிய இயல்பினள் என்றும் தலைவன் தலைவியைப் பாராட்டுகிறான். மனை நோக்கி வந்தோருக்கு விருந்தளித்துப் போற்றும் தலைவியின் சிறந்த இல்லற மாண்பினை அறியலாம். மேலும்,

**வாழி யாதன் வாழி யவினி**
**விளைக வயலே வருக இரவல**
**ரெனவேட் டோளே யாமே யாமே** (ஐங் –2)

எனும் ஐங்குறுநூற்று வரிகளில் இரவலர் நான்கு திசைகளில் இருந்தும் வரவேண்டும் எனத் தலைவி விரும்புகிறாள். விருந்தாற்றுவதற்கும் எளியோரைப் பேணுதற்கும் மனங்கொண்ட அறக்கடமை

உணர்வு தலைவியிடம் மேலோங்கி நிற்பதை காணமுடிகிறது.

**தன்னடக்கம்**

**தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்**
**எத்திறத் தானும் கிழத்திக் கில்லை** **(தொல்.பொருள்-178)**

தலைவன் முன்பு தன்னை புகழ்ந்து கொள்ளும் இயல்பு தலைவிக்கு இல்லை என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

> **பொறுப்பு மிக்க இல்லறத் தலைவி எச்சூழ்நிலையிலும் கணவன் முன் தன்னையோ தன் குடும்பத்தையோ உயர்வாகப் பேசிக் கொள்ளல் கூடாது. இல்வாழ்க்கையின் வெற்றி இரகசியங்களில் இதுவும் ஒன்று. இந்த இரகசியத்தைத் தமிழ்ச் சமுதாயம் நன்கறிந்தது. இது பெண்ணடிமை நிலையைக் கூறியதன்று. பெண்ணின் பெருமையையே, வெற்றியையே கூறியதாகும்.7** என ப.ச. ஏசுதான் தொல்காப்பியம் காட்டும் சமுதாயம் எனும் நூலில் விளக்கியுள்ளார். தலைவி தன்னடக்கத்துடன் இல்லறக் கடமைகளை இனிதே நடத்தும் நற்பண்புடையவளாக விளங்குகிறாள்.

**இல்லறத்தை நடத்தும் பெரும் பொறுப்பு கணவனுக்கு வாழ்க்கைத் துணையாக நிற்கும் மனைவியிடம் இருந்தது. மனையின்கண் இருந்து மனையறம் நிகழ்த்தும் உரிமை உடையவள் மனைவி. மனை வாழ்க்கைக்குப் பொலிவினைத் தரும் மனைவியை 'மனைக்கு விளக்காகி வாணுதல்'** என்று புறநானூற்றுப் புலவர் இல்லறத் தலைவியை பாராட்டுகிறார். இத்தகைய குடும்ப விளக்கு – இல்லினை ஆள்பவள் – 'இல்லாள்' எனப்பட்டாள். இவ்வாறு மணம் புரிந்து கணவனுடன் வாழும் காலத்தில் தலைவியின் அரிய பண்புகளான அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், விருந்தினரை வரவேற்றல் முதலிய இல்லறக் கடமைகளை மனமுவந்து அன்புடன் செய்யும் பண்பு மிக்கவளாக தொல்காப்பியத்துள் காட்டப்படுகிறாள்.

**குறியிடம் கூறல்**

தலைவனும் தலைவியும் காதல் கொண்டு பழகும் காலத்தில் யாருக்கும் தெரியாமல் சந்திக்கும் இடத்தைப் பெண்தான் தீர்மானிக்கின்றாள். அதற்கு காரணம் தங்களது காதல் குறிப்பிட்ட காலம் வரை பிறர் அறியாமல் இருப்பது நலமெனக் கருதியும் தலைவன் எல்லை மீறினால் கூட தலைவிக்கு அறமில்லை எனக் கருதியும் தானே இப்பொறுப்பை ஏற்கிறாள் என்பதை,

**அவன் வரம் பிறத்தல் அறந்தனக் கின்மையின்**
**களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகுந்**
**தான்செலற் குரியவழி யாக லான** (தொல்.பொருள்-118)

என்ற நூற்பாவின் உரைவிளக்கத்தில் பின்வருமாறு நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார்.

**தலைவன் கூறிய கூற்றின் எல்லையைக் கடத்தல் தலைவிக்கு உரித்தெனக் கூறிய தருமநூலின்மையின் தலைமகனை இன்னவிடத்து வருகவென்ற ஓரிடத்தைத் தான் கருதிக் கூறும் கூற்று அவன் குறிப்பு வழி ஓங்கும் தலைவியதாம், தான் சென்று கூடுதற்குரிய இடந் தானே**

**உணர்வள்8**

மேலும், தொல்காப்பியர், தலைவி குறிகள் நிகழும் இடத்தைக் கூடத் தானே குறிக்கிறாள் என்பதை

**இரவுக் குறியே இல்லகத் துள்ளும்**
**மனையோர் கிளவி கேட்கும் வழி யதுவே**
**மனையகம் புகாஅக் காலையான** (தொல்.பொருள்129)

**எனவும்,**

**பகற்புணர் களனே புறனென மொழிப**
**அவளறி வுணர வருவழி யான** (தொல்.பொருள்-130)

எனும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார். தலைவி தன் இல்லத்தின் புறத்தே இல்லில் உள்ளோர் பேசுவது கேட்கும் தூரத்தில் மட்டுமே செல்லக் கூடிய இயல்பினை உடையவளாக இருந்திருக்கிறாள். இதனை

**இரவுமனை இகந்த குறியிடத் தல்லது**
**கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை** (இறை.அக-21)

என்ற நூற்பா வரையறை செய்கிறது. இவ்வாறு தலைவி நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவெடுக்கும் ஆற்றல் உடையவளாக திகழ்கின்றாள்.

**தொகுப்புரை**

அகவொழுக்கத்திற்கும் உலக வாழ்க்கைக்கும் பெண்ணே ஆணைவிடச் சிறப்புடையவள் என்பது புலப்படுகிறது. பழந்தமிழ் மக்கள் அகவொழுக்கத்தைப் பலவாறு விரித்தும் இலக்கண வரையறை செய்தும் இலக்கியத்திற் பொதிந்தும் பொன்னேபோற் போற்றி வாழ்ந்தனர். மகளிரின் இயல்புகூறுகள் தலைவியின் ஒப்பற்ற மாண்புகள், இல்லறப் பண்பு, விருந்தோம்பல் பண்பு போன்ற அகத்திணை களவு - கற்பு வாழ்வியல் வழித் தலைவியின் தனித்துவங்களையும் இன்னபிறவும் ஆராய்ந்தறியப்பட்டன.

**அடிக்குறிப்பு**

1, இறையனார் களவியல் நூ 2

2. தேவநேயப் பாவாணார், பண்டைய தமிழக நாகரிகமும் பண்பாடும், பக் 221.

3. பாலசுந்தரம், தொல்காப்பியப் பொருளதிகார உரை, 206.

4. மேலது

5. விசயரத்தினம்,கா, தொல்காப்பியத் தேன் துளிகள், பக், 52. மணிமேகலைப் பிரசுரம், சென்னை 2008.

6. சிதம்பரனார்.சாமி, தொல்காப்பியத் தமிழர், பக் 42

7. ஏசுதாசன் ப. தொல்காப்பியம் காட்டும் சமுதாயம், பக்

8. நச்சினார்க்கினயர், தொல்காப்பியம் பொருளதிகாரம்,நூ 120